**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1245/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | முருகன் | Prosecution | PW1 cross |
| Father Name | மணி | Defence | |
| Village | வெள்ளக்குளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 47/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**25.07.2025 எதிரிகள் ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

**1.** நானும் எதிரியும் குடியிருந்து வரும் வீடானது ஒரே தெருவில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து எதிரியின் வீடு 7 வீடுகள் தள்ளி உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மீன்பிடி தொழில் செய்பவர்கள் என்றால் சீசனுக்கு மட்டும் செல்வார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதி கொடுத்தேன். மேற்படி புகாரை எப்போது நான் கொடுத்தேன் என்றால் என்னை அவர்கள் அடித்த அன்றே கொடுத்தேன். நான் சொல்வது தவறு என்றாலும் சம்பவம் நடந்து நான்கு நாட்கள் கழித்து தான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்த மேற்படி புகாரில் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், நான் மருத்துவமனைக்கு சென்றேன். புகாரில் மாற்றி எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் புகாரை நான் எழுதவில்லையா என்றால் நான் எழுதவில்லை. நான் எழுதிக் கொடுத்த புகார் இதுவல்ல.

2. எதிரிகளுக்கும் எனக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருப்பதாக சொல்லும் நிலையில் அது சம்பந்தமாக நான் அவர்களுக்கு எதிராக காவல்துறையில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல எதிரிகள் என்னை தாக்கி இருந்தால் நான் நிச்சயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருப்பேன் என்றாலும் அவ்வாறு செய்யாததில் இருந்தே அத்தகைய

சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பது தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல.

3. 14.07.2022ம் தேதி கிராம கோவிலில் நடனம் நடைபெற்றது என்றால் சரிதான். அன்றைய தினம் நான், ஐயப்பன் மற்றும் வீரமணி ஆகிய மூவரும் சேர்ந்து எதிரி விஜயகுமாரை தாக்கி அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் தவறு. மேற்படி சம்பவம் தொடர்பாக விஜயகுமார் புகார் கொடுத்து அதில் நான் பிணையில் சென்றுள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தினமே விஜயகுமாருக்கு முதுகு எலும்பு முறிவு ஏற்பட்டு அன்றைய தினமே என் மீதும் மற்ற நபர்கள் மீதும் அவர்கள் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

4. A2, A3 ஆகியோர் இருவருமே கோவில் விசேஷத்திற்கு ஊரில் பணம் வசூல் செய்து விழா நடத்துவார்கள் என்றால் சரிதான். என்னை பணம் வசூலித்துக் கொள்ள அவர்கள் அனுமதிக்கவில்லை என்பதால் எனக்கு அவர்களோடு விரோதம் உண்டு என்றால் தவறு. அவர் தற்காலிகமாக தான் அந்த திருவிழாவுக்காக வேண்டி பணம் வசூல் செய்தார். அதற்கு முன்பெல்லாம் நாங்கள் தான் வசம் செய்தோம். மேற்படி விவரம் பற்றி நான் என் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி செய்கை பிடிக்காமல் தான் நான் எதிரிகளை பழி வாங்குவதற்காக 14.07.2022 அன்று விஜயகுமாரை தாக்கியும் தற்போது இந்த பொய் புகாரை கொடுத்தும் பொய்சாட்சியமும் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

5. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லும் நிலையில் அதற்கு மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கு சான்றாக எந்த ஒரு ஆவணங்களையும் போலீசாரிடம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**